

India ECHOES
ONE WORLD ONE HUMANITY
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

# பஞ்சாப் சுற்றுப்பயணம்





## சண்டிகர்

மாஸ்டர் பிப்ரவரி 27 அன்று, அவருடைய பயணத்தைத் தொடங்கினார். கர்னலில் சிறிது நேரம் தங்கினார். அங்கு பேராவல் மிக்க அப்யாசிகளால் வரவேற்கப்பட்டார். சண்டிகர் வந்து சேர்ந்ததும், அங்கு குழுமியிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட அப்யாசிகள் மற்றும் குழந்தைகளால் வரவேற்பு அளிக்கப்பட்டது. கார்மூலம் ஆறு மணி நேர பயணத்திற்குப் பின்னர் அங்கு வந்து சேர்ந்தவுடன், மாஸ்டர் ஒரு சகோதரரின் குடியிருப்பினைத்திறந்து வைத்து சத்சங்கம் நடத்தினார்.

மறுநாள், பிப்ரவரி 28 அன்று, மாஸ்டர் காலையில் வெளியே வந்து, அப்யாசிகளின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில் ஒரு மணிநேரம் செலவழித்தார். மாஸ்டர் வழக்கம்போல் அவருடைய நகைச்சுவை மற்றும் அறிவாற்றலுடன் ஒவ்வொருவரையும் சிரிக்கவைத்தது, வேடிக்கையான கலந்துரையாடலாக இருந்தது.

## லூதியானா

மார்ச் 1 அன்று லூதியானா வந்தவுடன், மாஸ்டர் அப்யாசிகளுடன் கலந்துரையாடி, சத்சங்கமும் நடத்தினார். மறுநாள் அவர், லூதியானவில் உள்ள ஆசிரமத்திற்கான இடத்தில், சத்சங்கம் நடத்திய பின்னர் அடிக்கல் நாட்டினார். பின்னர், பஞ்சாப் மண்ணின் மேல் உள்ள தம் பிரியத்தினை வெளிப்படுத்தி உரை நிகழ்த்தினார். பஞ்சாப் மொழியில் சில வார்த்தைகளும் பேசினார். ஆசிரமத்திற்கு வராதவர்களைப் பற்றி அவர், "தூசி பேவாகப்" (நீ ஒரு முட்டாள்) என்றார். மேலும் "நால் ஆஜா" (வா என்னுடன் சேர்ந்துகொள்) என்றார். மாஸ்டர் பேசிய சில விஷயங்கள் பின்வருமாறு:

- மாஸ்டர் ஏன் மறுபடியும் மறுபடியும் வருகிறார்? என்ன காரணம்? என்று அப்யாசிகள் கட்டாயம் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.
- வேறொரு வழிமுறைக்குச்செல்லுவதற்கு முன்பாக தற்போதைய வழிமுறையினை கைவிட்டாக வேண்டும். நான் நனையாமலும் இருக்கவேன்டும் நீந்தவும் வேண்டும் என்றால் அது இயலாது. நான் பூமியில் நிற்கவும் வேண்டும் பறந்துசெல்லவும் வேண்டும் என்றால் அது முடியாது. அடுத்த வாழ்க்கை நிலைக்குச்செல்வதற்கு முன்பாக ஒரு வாழ்க்கை நிலையினை கைவிட்டாக வேண்டும்.
- மதத்தில் கடவுள் இல்லை அதுதான் உண்மை.
- மற்றவர்களுக்காக பிரார்த்தனைச் செய்வது ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் சுயநலத்திற்காக பிரார்த்தனை செய்தல் என்பது பிச்சை எடுத்தல் ஆகும்.

பின்பு மாஸ்டர் மதிய உணவுக்காக சண்டிகர் சென்றார்.

## சண்டிகர்

மார்ச் 3 அன்று, மாஸ்டர் தாகூர் தியேட்டரில் சத்சங்கம் நடத்தினார். மண்டலம் முழுமையில் இருந்தும் 600க்கும் மேற்பட்ட அப்யாசிகள் அங்கு குழுமி இருந்தனர். அவர்களின் அன்பிற்குரிய மாஸ்டருடன் இருந்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். சகோ.குர்பிரீட் இதயத்திற்கு இதமான சில பஜனைப் பாடல்களைப் பாடியதைத் தொடர்ந்து, சகோ.சத்பீர் மற்றும் சகோ.ஹர்பஜன் சிங் ஆகியோர் சுருக்கமான உரை நிகழ்த்தினார்கள். மறு நாள், காத்திருந்த அப்யாசிகளின் மகிழ்ச்சிக்காக மாஸ்டர் சூரிய ஒளியில் அமர்ந்து, கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் அளித்தார். மீண்டும் மாலையில் வெளியே வந்து சத்சங்கம் நடத்தினார்.

5ம் தேதி, மாஸ்டர் காலை உணவை விரைவிலேயே முடித்துக்கொண்டு டெல்லி சென்றார். அப்போது அதிக அப்யாசிகள் கொண்ட ஒரு குழுவினர், அன்பான மாஸ்டரை விரைவில் மீண்டும் வரவேற்போம் என்ற நம்பிக்கைக்கொண்ட இதயத்துடன் பிரியா விடை அளிக்கத் திரண்டு இருந்தனர். டெல்லிக்குச் செல்வதற்கு முன்பாக மாஸ்டர் கர்னலில் தங்கி அங்கு சத்சங்கம் நடத்தினார்.









மாஸ்டரின் சுற்றுப்பயணத்தின் போது சேகரித்த விவேக முத்துக்கள்:

- நிறைவேறாத ஆசைகள் காரணமாக கோபம் எழுகிறது. இது மனதினை மறைத்து, எண்ணம் ஏற்படுவதை தடுத்துவிடுகிறது. தன்னையே அழித்துக்கொள்வதற்கு இட்டுச் செல்கிறது.
- மகிழ்வு என்பது மனதின் நிலை. அதில் நீங்கள் வெளிஉலகத்தைச் சார்ந்து இல்லாமல், சுதந்திரமாக இருக்கின்றீர்கள்.
- நம்பிக்கை மனதினைத் திறக்கிறது. முன்கணிப்பு அதனை மூடுகிறது.
- அன்பு என்பது, இதயத்தில் இருந்து அனந்தத்திற்குச் செல்லும் ஒரு வழி வீதி.
- பல பிறவிகளுக்குப் பின்னர் அந்த ஆன்மா தன் துணையினைக் கண்டு பிடிக்கும் செயல்பாட்டின் உச்சக்கட்ட நிலை தான் உண்மையான திருமணம்.
- அன்புடன் செய்யும் எதுவும் அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்த்துவைக்கும்.
- மனதின் சக்தியினை எப்படி செயல்படுத்துவது என்ற கேள்விக்கு மாஸ்டர் சொன்னார்- " அதனைச் செயல்படுத்தத் தொடங்கும் போதுதான் வேறுபாடு உங்களுக்குத் தெரியும். மனதின் சக்திக்கு போதுமான பலம் இல்லாவிட்டால் ஆசை அதனை வெற்றிக்கொள்ளத் தொடங்கும். ஒழுக்கம் ஆசையினையும் மனதின் சக்தியினையும் சம அளவில் வைக்கிறது. எப்பொழுதும் நாம் அபாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் மனதின் சக்திக்கு வழிகாட்டுதல் கிடையாது. சுத்திகரிப்புத்தான் வழிகாட்டுதலை அளிக்கிறது"

## ரெய்பூர்

ரெய்பூர் விமானநிலையத்தில், இரவு 7.40 மணிக்கு, மாஸ்டர் அப்யாசிகளால் உற்சாகமாக வரவேற்கப்பட்டார். பின்பு, புதியதாக கட்டப்பட்ட ஆசிரமத்திற்குச் சென்றார். ஆசிரமம் சென்றடைந்தவுடன், மாஸ்டருக்கு மிகுந்த கட்டுப்பாடு மற்றும் அன்புடன் கூடிய மனப்பூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டது. 10 மணி அளவில் அவர் அலுவலக அறையில் இருந்து வெளியே வந்து, அப்யாசிகள் சூழ்ந்திருக்க, அரை மணி நேரம் அமர்ந்திருந்தார். 8ம் தேதி காலை, மாஸ்டர் தற்காலிக தியான மண்டபத்திற்கு வந்தார். 8.30 மணி அளவில் சத்சங்கம் நடத்தினார். சத்சங்கத்திற்குப் பிறகு, மாஸ்டர் கோல்ப் காரில் ஆசிரமத்தைச் சுற்றி வந்தார். அங்கு செய்யப்பட்டுள்ளவற்றைக் கண்டு திருப்தி அடைந்தார்.

மார்ச் 9ம் நாள், சண்டிகர் மற்றும் அதன் பக்கத்து மாநிலங்களில் உள்ள 2000 அப்யாசிகள் ஆவலுடன் எதிர்நோக்கி இருந்த நாளாக இருந்தது. மாஸ்டர் கல்வெட்டினைத் திறந்து வைத்தார். 9600 ச.அடியில் கட்டப்பட்ட தியான மண்டபத்தினை கண்டபோது மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அம்மண்டபம் நுணுக்கமாகவும், நல்லதரம் வாய்ந்ததாகவும் காட்சியளிக்கிறது. சத்சங்கத்திற்குப்பின்னர் மாஸ்டர் பேசினார்:

- ஆன்மீக விதையினை விதைக்கும் ஒரே பயிற்சிமுறை சகஜமார்க்கம்.
- அப்யாசிகளின் எண்ணிக்கை தரத்துடன்கூடிய உயர்வாக இருக்கவேண்டும்.
- தியானமண்டபம் தியானம் செய்வதற்காக மட்டுமே உள்ளது. மக்கள் அவர்களின் மத பழக்கவழக்கங்களை ஆசிரமவளாகத்தில் செய்யக்கூடாது.

மாஸ்டர் CRPF வீரர்களைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.(கிட்டத்தட்ட100 CRPF வீரர்கள் மிஷனில் சேர்ந்திருக்கின்றனர்) அவர்களில் மேலும் பலர் எதிர்காலத்தில் சேர்வதைக் காண விரும்புவதாகத் தெரிவித்தார்.

மாலை சத்சங்கம் குழந்தைகளின் சிறிய கலை நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் நடைபெற்றது.









மாலை சத்சங்கம் நடந்து கொண்டிருந்தபோது, மாஸ்டர் அவரது காட்டேஜிற்கு வெளியே அமர்ந்து சுமார் 80 தன்னார்வலர்களின் பணியை ஏற்றுக்கொண்டு கௌரவிக்கும் விதமாக, ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளி நாணயத்தை அளித்தார். அவரது உடல்நலம் குன்றியிருப்பினும், அவர் பூரிப்புடன் காணப்பட்டார். மேலும், அப்யாசிகளுடன் நேரத்தை செலவழித்தார்.

மார்ச் 10-ம் தேதி, மாஸ்டர் காலை 7:05 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். (அட்டவணைப்படி, காலை 7:30 மணிக்கு நடத்தப்பட வேண்டியிருந்தது). அதன் பிறகு, காலை சுமார் 10 மணிக்கு, ஒரு அப்யாசி சகோதரரின் வீட்டிற்குச் சென்றார். பின்னர், அங்கிருந்து நண்பகல் வாக்கில், ஹைதராபாத் செல்லும் விமானத்தைப் பிடிக்க விமான நிலையத்திற்குச் சென்றார்

## ஹைதராபாத்

மாஸ்டர், மார்ச் 10-ம் தேதி அன்று மதியம் சுமார் 1:45 மணிக்கு, விமான நிலையத்திற்கு வந்திருந்த அப்யாசிகளின் மகிழ்ச்சிகரமான வரவேற்புடன் ஹைதராபாத் வந்தடைந்தார். மண்டல ஆசிரமத்திற்குச் செல்லும் வழியில் ஏதோ அரசியல் ஊர்வலம் நடப்பதாக செய்தி வந்ததால், அவர் விமான நிலையத்தின் அருகில் இருக்கும் ஒரு அப்யாசியின் வீட்டிற்குச் சென்றார். ஒரு சிறிய ஓய்விற்குப் பிறகு, கன்ஹா ஷாந்தி வனத் திட்டம் சம்பந்தப்பட்ட சில விவரங்களைப் பார்வையிட்டார். அதன் பிறகு, அங்கிருந்த அப்யாசிகளுக்கு ஒரு சிட்டிங் கொடுத்தார்.

அடுத்த நாளும், மாஸ்டர் கன்ஹா திட்டத்தின் பதிவு சம்பந்தப்பட்ட விவரங்களை மேற்பார்வையிடுவதில் மும்மரமாக இருந்தார். குறிப்பாக, கன்ஹா திட்டத்தின் முதல் கட்ட பதிவுப்பணி திட்டமிட்டபடி நடந்து கொண்டிருந்ததால் அவர் மகிழ்வுற்றார்.

மார்ச் 12-ம் தேதி அன்று, மாஸ்டர் மண்டல ஆசிரமத்தைச் சென்றடைந்தார். அங்கே, அவரது அலுவலகத்திற்குச் செல்லும் வழி நெடுக வரிசையில் நின்றிருந்த, சில ஆயிரம் அப்யாசிகளால் வரவேற்கப்பட்டார். அப்போது மாஸ்டர், "அற்புதமான ஒழுங்குமுறை, பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது" என்று குறிப்பிட்டார். வசதியான ஏற்றத்துடன் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சரிவுப்பாதையில் நடந்து சென்று அவரது காட்டேஜிற்குள் நுழைந்தார். சற்று நேரத்திற்குப் பின், அலுவலகம் மற்றும் அவரது கருத்தரங்கு அறையை சுற்றிப் பார்த்தார். மாஸ்டர், காலையிலும் மாலையிலும் சத்சங்கம் நடத்தினார். இதில் 5000க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்துகொண்டனர். ஒரு அப்யாசி, மாஸ்டரின் தாடி அழகாக இருக்கிறது என்று குறிப்பிட்ட போது, மாஸ்டர் விளையாட்டாக, தாடிக்கு பின்னே இருக்கும் முகம் இன்னும் அழகானது என்று பதிலுரைத்தார். அன்று முழுவதும் மாஸ்டர் மிகுந்த உற்சாகத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்பட்டார்.

அவரது காட்டேஜின் வாயிற்கதவுகள் எப்போதும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. இந்த ஒரு செய்கையே, தங்களது அன்பிற்குரிய மாஸ்டரை, கணப்பொழுதேனும் காண்பதற்காக, தொலைதூர இடங்களிலிருந்து வந்திருந்த, காத்திருக்கும் இதயங்களுக்கு அமைதியை அளித்தது. சொல்லப்போனால், அவர் தனது படுக்கையறைக்கு வெளியே இருக்கும் தாழ்வரத்தில் அமர்வதற்காக வந்தபோது, அவரைப் பார்க்க அவர்களுக்கு பல வாய்ப்புகள் கிடைத்தன.

மார்ச் 13-ம் தேதி, மாஸ்டர் தியான மண்டபத்திற்கு நடந்து சென்று கொண்டிருக்கும்போது, சமையலறைக் குழுவினர் அவரை வாழ்த்தினர். மாஸ்டர் அவர்களுடன் சிறிது உரையாடிவிட்டு, உணவில் சேர்க்கப்படும் பல பொருட்களில் மிக முக்கியமானது, அதில் சேர்க்கப்படும் அன்புதான் என்று அவர்களுக்கு நினைவுபடுத்தினார். 6000க்கும் மேற்பட்ட அப்யாசிகளுடன், விளிம்புவரை நிரம்பியிருந்த தியான மண்டபத்தில் அவர் சத்சங்கம் நடத்தினார். மதிய வேளையில், குழந்தைகளுக்கு மாஸ்டருடன் ஒரு மணி நேர சிறப்பு நிகழ்ச்சி ஒன்று இருந்தது. சத்சங்கத்திற்குப் பிறகு, ஒரு ஆன்மீகத் தேடுநரின் குழப்பத்தையும், சகஜ மார்க்க போதகனைகள் வழங்கும் வழிகாட்டுதலையும் சித்தரிக்கும் ஒரு நாடகம் இருந்தது. மாஸ்டர் தனது அறையிலிருந்தவாறே நிகழ்ச்சியை CCTV-யின் மூலம் பார்த்து மகிழ்ந்தார்.







மார்ச் 14-ம் தேதி அன்று, மாஸ்டர் காலை சத்சங்கத்தை 7:30 மணிக்கு நடத்தினார். சத்சங்கத்திற்குப் பிறகு, நமது நற்பண்புகளை வலுப்பெறச்செய்து, உள்ளிருக்கும் ஒளியை, வெளிப்புறமாக ஒளிர அனுமதிப்பதற்கான தேவையை வலியுறுத்தி, ஒரு செய்தியை அளித்தார். பின்னர், மாஸ்டர் மதியம் 1:45 மணிக்கு விமான நிலையத்திற்கு பயணமானார்.

## சென்னை: மாஸ்டர் வீடு திரும்புகிறார்.

கிட்டத்தட்ட ஒன்றறை மாதங்களுக்குப் பிறகு, மார்ச் 14-ம் தேதி, மாஸ்டர் ஹைதராபாத்திலிருந்து திரும்பினார். விமான நிலையம், நீண்ட நாட்களுக்குப் பிறகு, அவரைப் பார்ப்பதில் பெருமகிழ்ச்சி கொண்டிருந்த அப்யாசிகளால் நிறைந்திருந்தது. அவர் நேரே 'காயத்ரி'க்குச் சென்று, அங்கே ஓய்வெடுப்பதும், மாலை நேரங்களில் மக்களை சந்திப்பதுமாக அந்த வாரத்தைக் கழித்தார். அவர் சில சமயங்களில் சத்சங்கம் நடத்தினார், சில சமயங்களில் அப்யாசிகளிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போதிலிருந்து, அவர் 'காயத்ரி'க்கும் ஆசிரமத்திற்கும் இடையே தனது நாட்களைப் பகுத்துக் கொண்டிருக்கிறார். அவரால் ஓய்வெடுக்கவும், சில தருணங்களில் அப்யாசிகளுடன் கடற்கரைக்குச் சென்று இளைப்பாறவும் இயலுகிறது. அவருடைய வழக்கமான பணிகளான மிஷனின் நிர்வாகம், மின்னஞ்சல் அனுப்புதல் மற்றும் புது பிரிசெப்டர்களை உருவாக்குவது ஆகியன வழக்கம்போல் நடைபெற்றுவருகின்றன.

## அப்யாசிகள் பெரும் எண்ணிக்கையில் மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு வருகின்றனர்.

மும்பை மையத்திலிருந்து, ஐந்நூறு அப்யாசிகள் கொண்ட ஒரு பெரிய குழு, நான்கு நாட்களுக்கு மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு வந்தது. மாஸ்டர் அவர்களுக்கு சத்சங்கங்கள் நடத்தினார். ஒவ்வொரு நாளும், அழைக்கப்பட்ட பிரிசெப்டர்கள் மற்றும் காரியதரிசிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ததன் மூலம், அவர்கள் அதை ஒரு கருத்தரங்கமாக ஆக்கினர். அவர்கள் மாஸ்டருக்கு ஒரு சிறப்பு கேக்கையும் வெட்டி, ஒரு மாலைப் பொழுதில் ஒரு சிறிய நிகழ்ச்சியையும் நடத்தினர். மாஸ்டர் அதற்காக மிகவும் மகிழ்ந்தார். அருகிலும் தொலைவிலும் உள்ள, இந்தியாவின் மற்ற மையங்களிலிருந்து, பெருந்திரளாக, ஒரு சீரான ஓட்டத்தில், அப்யாசிகள் மணப்பாக்கத்திற்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர். கடந்த ஒரு மாதத்தில் மட்டும், வெளி மையங்களிலிருந்து ஏறத்தாழ 3,300 அப்யாசிகள், மாஸ்டருடன் இருப்பதற்காக, மணப்பாக்கத்திற்கு வருகை தந்துள்ளனர்.




ஏப்ரல் 10-ம் தேதி, மாஸ்டரால் எட்டு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. தனது கால்களில் உள்ள வலியினால் துன்பப்பட்டாலும் கூட, மாஸ்டர் திருமணங்களை நடத்தி வைக்கும் நேரம் முழுவதும் நிற்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு நின்றிருந்தார்.

## மாஸ்டர் தான் விதைத்த பயிரை அறுவடை செய்கிறார்

மாஸ்டர் LMOIS-ன் மாணவர்களுடன் நேரம் செலவழித்துக்கொண்டும், அவர்களிடம் சிறப்பு கவனம் செலுத்திக்கொண்டும் இருக்கின்றார். அவர்களில் கிட்டத்தட்ட அறுபது பேர், தியானம் செய்யத் துவங்கியுள்ளனர். அவர்களில் பலர் பதினெட்டு வயதிற்குட்பட்டவர்கள்தான் எனினும், தியானத்தைத் துவக்க மாஸ்டரிடமிருந்து சிறப்பு அனுமதி பெற்றவர்கள். சத்சங்கங்களின் போது, அவர்கள் முன் வரிசையில் அமர்ந்திருப்பதை நாம் காணலாம். ஒரு நாள் மாலை, அவர் காட்டேஜில் அவர்களுக்கு ஒரு சிட்டிங் கொடுத்துவிட்டு, பின்னர் அவர்களுடன் இரவு உணவு அருந்தினார். இந்த வளர்ச்சியைப் பற்றி திருப்திகரமாக குறிப்பிடுகையில் அவர், " நான் தனது பயிரை அறுவடை செய்யும் ஒரு விவசாயியின் நிலையில் இருக்கிறேன். நான் இந்த குழந்தைகள் மீது வேலை செய்து கொண்டிருக்கிறேன். அதுதான் எனக்கு முதன்மையான விஷயம். நான் கல்வி மற்றும் பிற விஷயங்களைப் பற்றி கவலைப்படவில்லை" என்றார். ஒரு ஆசிரியரின் பணியைப் பற்றி மாஸ்டர், "தான் கொடுக்கும் விஷயத்தின் மீது மனத்தைக் குவிக்காமல், தான் சொல்வதை குழந்தைகள் உள்வாங்கிக் கொள்கிறார்கள் என்பதை உறுதி செய்பவரே ஒரு ஆசிரியர் ஆவார். ஒரு நல்ல ஆசிரியர் எப்போதும் தனது மாணவர்களிடம் ஒரு வியப்பு மற்றும் ஈர்ப்பை உருவாக்குகிறார், என்று கூறினார்.

## தென் மண்டலங்களுக்கான ISTP

இந்திய ஸ்காலர்கள் பயிற்சி நிகழ்ச்சி, (ISTP) மாஸ்டரால் ஏப்ரல் 16-ம் தேதி துவக்கிவைக்கப்பட்டது. இதில் இந்தியாவின் தென் மாநிலங்களிலிருந்து 59 பங்கேற்பாளர்கள் வந்திருந்தனர். மாஸ்டர், அறிவின் வரம்புகள், இவ்வாழ்க்கைக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதைப் பற்றிய நமது அறியாமை, மற்றும் சகஜ மார்க்கத்தில், எவ்வாறு அனைத்தும் ப்ராணாஹுதியின் மூலம் அளிக்கப்படுகிறது என்பதைப் பற்றி விளக்கினார். உலகியல் வாழ்க்கை கஷ்டங்கள் நிறைந்ததாகவே இருக்கிறது. மேலும், கடந்தகாலத்துறவிகளுக்கும் கூட துன்பங்களிலிருந்தும் ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்படவில்லை, என்று அவர் கூறினார்.





# அறிவிப்புகள்

### புதிய நியமனங்கள்

விஜய்குமார் அகர்வால்
மையபொறுப்பாளர், படின்டா மையம்

மேஜர் ஜெனரல். ஆனந்த் நாராயண் முட்ரே (ஓய்வு பெற்றவர்)
மைய பொறுப்பாளர், ஜபல்பூர் மையம்

சந்தீப் பிரதான்
மைய பொறுப்பாளர், குவாலியர் மையம்

### சத்கோலில் மருத்துவர்களுக்கான தன்னார்வத் தொண்டு

ஜுலை 2011 முதல் டிசம்பர் 2011 வரை, சத்கோல் மருத்துவ மையத்தில், மருத்துவ அப்யாசி தன்னார்வ தொண்டர்களுக்கான பதிவு தொடங்கப்பட்டுள்ளது. தயவுசெய்து உங்களுடைய விருப்பத்தை, எவ்வளவு விரைவாக தெரிவிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக தெரிவிக்கவும். தன்னார்வத் தொண்டிற்கான கால அளவு 15 நாட்கள்.
மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:
டாக்டர்.சி.கே. பிரசன்னகுமார்
தங்கியிருக்கும் மருத்துவர்
மருத்துவ மையம்
சத்கோல்

### மாஸ்டரின் 85-வது பிறந்தநாள் விழாவிற்கான பதிவு

இந்தியாவில், திருப்பூர் மையத்தில் மாஸ்டரின் 85-வது பிறந்தநாள் விழாவிற்கான பதிவு தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள அனைத்து அப்யாசிகளும், தங்களுடைய மையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தின் நகல் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், நமது மிஷனின் இணையதளத்திலிருந்தும் நீங்கள் விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டு அப்யாசிகள் கணினியின் மூலம் நேரடி பதிவு செய்து கொள்ளலாம். அதற்கான விபரங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.


அப்யாசிகள் அனைவரும், உடல்நலம், மற்றும் பாதுகாப்பான பயணத்திற்கான ஆலோசனை குறிப்புகளை படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதனுடைய விபரங்கள் அனைத்தும் http://www.sahajmarg.org/july-24-celebrations/2011 என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

### ஒளி உலகிலிருந்து மென்குரல்கள் - மூன்றாவது வெளியீடு


மாஸ்டரின் அனுமதியுடன், மார்ச் 8 ம் தேதியிலிருந்து, "ஒரு நாளில் ஒரு மென்குரல்" சந்தாதாரர்கள், இந்த ஒளி உலகிலிருந்து மென்குரல்கள் மூன்றாவது புதிய வெளியீட்டைப் பெறுவார்கள். இந்த தினசரி இ-மெயில் சேவையில் நீங்கள் சந்தாதாரராக இல்லையெனில், கீழ்க்காணும் நமது மிஷன் இணையதள முகவரியில் சந்தாதாரராக முடியும்.

http://www.sahajmarg.org/literature/newsletters


# புதிய வெளியீடுகள்




ஹார்ட் ஸ்பீக் 2007
தெலுங்கு





ஹார்ட் ஸ்பீக் 2010
ஆங்கிலம்





மை மாஸ்டர்
தெலுங்கு, நேபாளி&
கன்னடம்




வாய்ஸ் ரியல் 2
மலையாளம்




ரியாலிடி அட் டான்
பஞ்சாபி




கான்ஸ்டன்ட் ரிமம்ப்ரன்ஸ்
ஏப்ரல் 2011





ஸ்பார்க் கலெக்டர்2
ஆங்கிலம்




கேரக்டர் பார்மேஷன்
MP3 ஆங்கிலம்

# கடந்த காலம் பற்றிய ஒரு பார்வை

1977 ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதியிலிருந்து 23 ஆம் தேதி வரை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் வெளிநாட்டு பயணம் சென்ற பாபூஜியுடன் மாஸ்டரும் சென்றார். அந்த பயணத்தின் விமர்சையான தொடர்ச்சியாக, ஏப்ரல் 30 அன்று பாபூஜியின் 78 ஆவது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள் மதுரையில் நடைபெற்றன. பின்வருவன மாஸ்டரது (அவரது அடிச்சுவடுகளில்) நாட்குறிப்பேட்டிலிருந்து எடுக்கப்பட்ட அந்த கொண்டாட்டங்களின் சாராம்சங்களாகும்.



### 30 ஏப்ரல்,1977 - சனிக்கிழமை

நான் வாலாம்ஜி மேன்ஷனிலிருந்து புறப்பட்டு, சுமார் ஒன்றரை கி.மீ. தொலைவிலிருந்த தல்லாகுளத்தில் உள்ள 'பெரியார் மாளிகை'க்கு, விழாவிற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்து விட்டனவா என்பதை கண்டறியச் சென்றேன். இன்று மாஸ்டரது எழுபத்தி ஒன்பதாவது பிறந்தநாள் என்பதுடன், இந்த வருடம் அனைத்து இந்திய அளவில், இக்கொண்டாட்டங்கள் நடைபெற அனுமதியும் பெற்று மதுரை மையம் ஆசீர்வதிக்கப்பட்டது.

9.30 a.m. - மாஸ்டர் சில விநாடிகளுக்கு முன்பு வந்தார். அங்கு குழுமியிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்யாசிகள் அவரை அன்புடன் வரவேற்றனர். மேலும் அவர்கள் ஆர்வத்துடன் காலை

8.00 மணி முதல் காத்துக் கொண்டிருந்தனர். மாஸ்டர், குழு சத்சங்கத்தை இருபது நிமிடங்கள் நடத்தினார். அந்த காலை வேளையிலேயே மிக வெப்பமாக இருந்தது. உயர்த்தப்பட்ட மேடையில் அமர்ந்திருந்த மாஸ்டரின் இருபுறமும் மேசை காற்றாடிகள் சுற்றிக்கொண்டிருந்தன. இருப்பினும் என்னால் அவரின் அசௌகரியத்தை பார்க்க முடிந்தது. டிரான்ஸ்மிஷன் மென்மையாகவும் மிருதுவாகவும் இருந்தது.

சத்சங்கத்தை தொடர்ந்து மாஸ்டர் சில விநாடிகள் ஓய்வெடுத்தார். மற்றும் ஒரு தனி இடத்தில் அவர் பிரசாதத்தை வழங்கினார். அதன் பின்பு மாஸ்டர் திரும்பவும் மேடைக்கு வந்தார். அதனை தொடர்ந்து சில உரைகள் நிகழ்த்தப்பட்டன. வாலாம்ஜி மேன்ஷனுக்கு செல்லும் முன், மாஸ்டர் 11.30 a.m. மணி வரை ஓய்வெடுத்தார்.

மாஸ்டர் மாலை 6.00 மணியளவில் மீண்டும் கூடத்திற்கு வந்து, மாலை சத்சங்கத்தை நடத்தினார். 'நான் காலையில் பாதி வேலையை நிறைவு செய்தேன். இப்போது மேலும் உள்ளதை நிறைவு செய்வேன்' என்று அவர் என்னிடம் கூறினார்.

...டுன்றைய புத்தக விற்பனை மொத்தமாக ரூபாய் 3000! நாங்கள் இரவு ஒன்பது மணிக்கு வீட்டிற்கு வந்தோம். மாஸ்டருடன் நேரத்தை செலவிட, பல அப்யாசிகள் வந்திருந்தனார். எல்லோரும் ஏற்பாடுகளை பற்றியும், மாஸ்டர் கொடுத்த சிட்டிங் போன்றவைகள் பற்றியும் புகழ்ந்தனர். 'இது லாலாஜி சாகிப்பின் அருள். இங்கு வந்தவர்கள் யாரும் வெறும் கையுடன் செல்வதில்லை' என்று மாஸ்டர் சொன்னார் .

## சகோதரிகள் கல்விக் குழு, இந்தூர், மத்திய பிரதேசம்

அப்யாசி சகோதர சகோதரிகளுக்கிடையே எந்த வித்தியாசமும் இல்லை என்ற போதிலும், அவர்கள் இருவரும் வாழ்வில் வெவ்வேறு வகையான கதாப்பாத்திரங்களை ஏற்பதுடன், அவர்கள் தினசரி வாழ்வில் வெவ்வேறு சூழ்நிலைகளை எதிர்க்கொள்கின்றனர். மேலும் அவர்கள் அவற்றில் ஆன்மீக கோட்பாடுகளை செயல்படுத்த வேண்டும்.

இது போன்ற குறிப்பிட்ட விஷயங்கள் கண்டறியப்பட்டு, ஒரு சகோதரிகள் குழு ஒவ்வொரு மூன்றாவது வெள்ளிக்கிழமையும் சத்சங்கத்தில் சந்திக்கவும், சாதனா சார்ந்த பல்வேறு விஷயங்களை பகிர்ந்து கொள்ளவும் முடிவு செய்தனர்.

மார்ச் 18 ஆம் தேதி அன்று முதல் கூட்டம், சகோதரி கலாவின் இல்லத்தில் நடைபெற்றது. சுமார் இருபது சகோதரிகள் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து "குரு மற்றும் இலட்சியம்" என்ற புத்தகத்திலிருந்து ஒரு அத்தியாயம் வாசிக்கப்பட்டது. மற்றும் நற்குணங்களின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடினர். நமது வாழ்வில் எப்போதும் நாம் இன்பங்களை தேடியோ அல்லது துன்பங்களை தவிர்ப்பதற்கோ ஓடுகிறோம். இப்போது அவர் நமக்கு, நமது தேவைக்கேற்ப சேவை மனப்பான்மையுடன் செயல்பட கற்றுக்கொடுக்கிறார். மேலும் சாதனாவின் பல அம்சங்கள் குறித்தும் கலந்துரையாடினர். இந்த குழுவினர், இந்நிகழ்ச்சி படிப்படியாக முன்னேறி, மேலும் பல பங்கேற்பாளர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.



## இளைஞர் கருத்தரங்கம் - மும்பை

மார்ச் 5 ஆம் தேதி மதியம் 2.00 மணிக்கு, பன்வேலிலுள்ள பாபூஜி நினைவு ஆசிரமத்தில், இரண்டு நாள் அனைத்து மகாரஷ்ட்ரா மற்றும் கோவா இளைஞர் மாநாடு (AMGYC) தொடங்கியது. இந்த நிகழ்ச்சியின் மையக்கருத்தாக 'மாயத்தோற்றம் கொண்ட வலையிலிருந்து விடுபடல்'என்ற பொருள் எடுத்துக்கொள்ளப்பட்டது. 150 அப்யாசிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். இந்த கருத்தரங்கத்திற்கான கோப்புக்கள், மாஸ்டரின் போதனைகளை அடிப்படையாக கொண்டு பூனா மற்றும் மும்பை பிரசெப்டர்கள் வழிகாட்டுதலோடு அமையப் பெற்றன. நமது மிஷன் இளைஞர்களின் அசாதாரணமான திறன்கள், இந்த நிகழ்ச்சியில் மலர்ந்தன. பூனாவை சேர்ந்த பங்கேற்பாளர்கள் "என் பாலாடைக் கட்டியை எடுத்துச் சென்றவர் யார்?" என்ற தலைப்பில் ஒரு சிறுநாடகத்தை நடத்தினர். மும்பையை சேர்ந்த பங்கேற்பாளர்கள் "அடுத்த கணமே இறப்பதை போல் வாழ்க்கையை வாழ்ந்து காட்டு" என்ற தலைப்பில் சிறுநாடகத்தை நடத்தினர். சகோதரர் சஞ்சய் பாட்டியா, சகோதரர் சந்தோஷ் ஸ்ரீனிவாசன் மற்றும் சகோதரர் சுபாஷ் வைத்யா ஆகியோர் அவர்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டது, பங்கேற்பாளர்களை ஊக்கப்படுத்தியது. குழுக்கலந்துரையாடல் மற்றும் தன் உள்நிலையை ஆராய்வது போன்ற பகுதிகளும் இருந்தன. கருத்தரங்கத்தின்போது இருந்த சூழ்நிலை, பன்டாராவின் சூழ்நிலையை ஒத்திருந்தது. மாஸ்டரது பிரசன்னத்தை மிக ஆழமாக உணர முடிந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற இளைஞர்கள் மேம்பட்ட அனுகூலத்தை அடைந்தனர்.



மலர் 4 இதழ் 3 மே 2011
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்




## உணவக நிர்வாக கல்வி(Hotel Manegement institute) நிறுவன மாணவர்களுக்கான விளக்கவுரை, வடோதரா, குஜராத்

குஜராத் உணவக நிர்வாக கல்வி நிறுவனம் மற்றும் பாண்டிச்சேரி பல்கலைக்கழக (MBA படிப்பு) மாணவர்களுக்கு, பிப்ரவரி 26 ஆம் தேதி, ஒரு அறிமுக கூட்டம் நடத்தப்பட்டது. சகஜ மார்க்க தியானம் மற்றும் சுத்திகரிப்பு பற்றிய கருத்துக்கள், மிக எளிய நடையில், உதாரணங்களுடன் விளக்கப்பட்டன. இளைஞர்கள் ஆற்றலுடனும் ஆர்வத்துடனும் இருந்தனர். அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்து வெளியிலிருக்கும் கடுமையான யதார்த்தம் மற்றும் எதிர்பார்ப்புக்கள் நிறைந்த உணவக தொழிலகங்களுக்கு செல்லவிருக்கும் தருவாயில், சமநிலையான வாழ்வு மற்றும் இதயத்தின் குரலை கேட்டு செயல்படுவது குறித்து உரை அமைந்தது. பேசுபவர்களும் இளைஞர்களென்பதால், மாணவர்கள் மிகுந்த கவனத்துடன் உரைகளை கேட்டுக்கொண்டிருந்தனர். மொத்தம் இருந்த 92 மாணவர்களில் 56 பேர் தியானப் பயிற்சியை தொடங்குவதற்கு ஆர்வம் காட்டினர். சகஜ மார்க்க துண்டுப் பிரசுரங்கள் கொடுக்கப்பட்டன. இந்த ஆற்றல் மிக்க இளைஞர்கள், இதனை சரியான பாதையில் வழி நடத்தும் சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை எழுந்தது. இந்த நிறுவனத்தின் இயக்குனர் இந்நிகழ்ச்சியால் மகிழ்வுற்றார். மேலும் இது போன்ற பல பயிற்சிமுகாம்கள் நிகழ்த்த ஆர்வம் காட்டினார்.

## குழந்தை வளர்ப்பு பயிற்சி முகாம், வடோதரா, குஜராத்

பரோடா உயர் நிலை பள்ளியில், பெற்றோர்களுக்கு ஒரு பயிற்சி முகாம் நடத்தும் வாய்ப்பு, VBSE தன்னார்வ தொண்டர்களுக்கு கிடைத்தது. அவர்கள் குடும்ப சூழ்நிலை, குழந்தைகளிடத்தில் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு மற்றும் பெற்றோர்களிடத்தில் குழந்தைகளின் எதிர்பார்ப்பு, குழந்தைகளின் உணர்வுகளை கையாள்வது, அன்பு, ஒழுக்கம், சுதந்திரம் மற்றும் சுற்றுப்புறம் என்ற குழு கலந்துரையாடல்கள் மூலம் ஆரம்பித்தனர். இந்த தலைப்புகள் யாவும், இன்றைய சூழலில் பெற்றோர்கள் மற்றும் வளரும் குழந்தைகளிடையே ஏற்படும் பிரச்னைகளை கருத்தில் கொண்டு தேர்வு செய்யப்பட்டன. அதன் பின்னர் நமது பிரிபெக்ட், சகஜ மார்க்கப் பார்வையில் குழந்தை வளர்ப்பு குறித்து உரையாற்றினார். அவர், பெற்றோராக தமது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், எப்படி அவர் கடினமான சூழ்நிலைகளில், அமைதியுடன் மற்றும் திறந்த மனதுடன் செயல்பட்டார் என்பது குறித்து பேசினார். எல்லா பெற்றோர்களும், 3 மணி நேரம் முழுமையாக ஈடுபாடு கொண்டதுடன், தன்னார்வ தொண்டர்களுடனும் கலந்துரையாடினர். இந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்ட 30 பெற்றோர்களில், 15 பேர் தியானம் தொடங்க ஆர்வம் தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சி மிகவும் பாராட்டப்பட்டது. மேலும் இது போன்ற பல பயிலரங்குகள் வருங்காலத்தில் நடைபெற வேண்டுமென்று பள்ளி வேண்டுகோள் விடுத்தது.



## 'இயற்கை மற்றும் நான்' - கோடை கால கூட்டம், பெங்களூர்

ஏப்ரல் 8 முதல் 10 வரை, ஒரு மூன்று நாள் தங்கி பங்கேற்கும் நிகழ்ச்சி, பனசங்கரி ஆசிரமத்தில் நடைபெற்றது. அதில் 7 முதல் 15 வயது வரையிலுள்ள 80 ஆர்வமிக்க பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

குழந்தைகள் இயற்கையின் பஞ்ச பூதங்களின் அடிப்படையில் குழுக்களாக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடல்கள் நடத்தியதுடன், கலை மற்றும் கைத்திறன் செயல்பாடுகள் மற்றும் பஞ்ச பூதங்களை பற்றிய விளக்கவுரைகளையும் வழங்கினர். மருத்துவ செடிகளைப் பற்றி வழங்கப்பட்ட தொகுப்பு, அவர்களின் செடி சார்ந்த ஆர்வத்தைத் தூண்டியது. ஐம்புலன்களை மையமாகக் கொண்ட விளையாட்டு நிகழ்ச்சிகள், எவ்வாறு மிகச் சிறிய அளவில் மட்டுமே அவற்றைப் பயன்படுத்துகிறோம் என்பதை அவர்களுக்கு உணர்த்தியது.

இரண்டாம் நாள் மறு சுழற்சி, மீண்டும் பயன்படுத்தல் மற்றும் அளவில் குறைத்தல் ஆகியவை பற்றிய அறிமுகக் கருத்துக்கள்மீது கவனம் செலுத்தப்பட்டது. ஒரு வல்லுநர் மழை நீர் சேகரிப்புப் பற்றி, அது எப்படி இயங்குகிறது என்று எடுத்துக்காட்டுடன் நேரடியாக விளக்கினார். கழிவிலிருந்து பொருள் வளம் என்ற கலை மற்றும் கைத்திறன் செயல்பாட்டினால் குழந்தைகள் நாட்குறிப்பேடுகள், கவரத்தக்க கிண்ணங்கள், செய்தித்தாளிலிருந்து பேனாவை வைக்கும் ஸ்டேண்ட், பழைய சிறு குப்பைகளிலிருந்து பூந்தொட்டிகள் மற்றும் பல பொருட்களைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டனர். சக்கரங்களின் மூலம் மண்பானை செய்வதில் குழந்தைகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். இதனைத் தொடர்ந்து புதையல் வேட்டை, வினாடி வினா, பொம்மலாட்ட நிகழ்ச்சி மற்றும் படங்கள் போன்றவை நடைபெற்றன.

மூன்றாம் நாள் 'உள்முக தன்மையை' மையமாக கொண்டிருந்தது. இக்கருத்துக்கள், விளையாட்டுக்கள் மூலமும், VBSE பாட திட்டத்திலிருந்த எண்ணங்கள் மூலமும் விவரிக்கப்பட்டன. குழந்தைகளின் செயல்திறன்கள் கண்காட்சியாக பெற்றோர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. குழந்தைகள் குழுவாக, தங்களுடைய கற்பனை திறனுடன் உருவாக்கிய, அன்பு, தைரியம் மற்றும் மன நிறைவு போன்ற நன்னெறிகள் சம்பந்தப்பட்ட சிறு நாடகங்களை நடத்தினர்.

பொழுதுபோக்கு நிறைந்த விளையாட்டுக்கள், கலந்துரையாடல்கள் மற்றும் சிறு நாடகங்கள் மூலம் குழந்தைகள் பல்வேறு நன்னெறிகளை சூட்சுமமான முறையில் அறிந்து கொண்ட, ஒரு கோடை கால கூட்டமாக இது அமைந்தது.



# கட்டுரைப்போட்டி சான்றிதழ்

## தில்லி

பிப்ரவரி 26 ம் தேதியன்று, மண்டல பொறுப்பாளர் சகோ. A.P. பால்டா அவர்கள், மண்டல அளவில் வெற்றி பெற்ற 17 மாணவர்களுக்கும், தேசிய அளவில் வெற்றி பெற்ற ஒரு மாணவனுக்கும் பரிசுகள் வழங்கினார். இதையொட்டி பேசிய அவர், மாணவனின் சிறந்த எதிர்காலத்திற்கான நற்பண்புகளை வளர்க்க, இம்மாதிரி நிகழ்ச்சிகள் உதவுவதை வலியுறுத்தினார். பரிசு பெற்றவர்கள் மிஷனுக்கு நன்றி நவின்றனர். கட்டுரைப்போட்டியின் போது ஏற்பட்ட எண்ணங்களையும் ,அனுபவங்களையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.


டெல்லி

## மதுரை

பிப்ரவரி 2ம் தேதி நடந்த விழாவில், 700க்கும் மேற்பட்ட அப்யாசிகளும், 200 மாணவர்களும், 100 பெற்றோர் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். திருமதி. பத்மா ராமச்சந்திரனும் மற்றும் மதுரை மாலைக்கல்லூரி முதல்வர் Dr. P.ராமச்சந்திரனும் கலந்துகொண்டு பரிசுகள் வழங்கினர். அனைத்திந்திய வானொலி நிகழ்ச்சி பொறுப்பாளரான திரு. அசோக், ஆன்மீகக்கல்வியின் அவசியத்தைப்பற்றி எடுத்துரைத்தார்.


மதுரை

## முசபர்பூர்

பிப்ரவரி 27ம் தேதி நடந்த விழாவில், திரு. S.M.ராஜு I.A.S முக்கிய விருந்தினராக கலந்து கொண்டார். ஆசிரியர், மாணவர் மற்றும் பெற்றோர் உள்ளடங்கிய சுமார் 150 பேர் இதில் கலந்து கொண்டனர். பரிசளிப்பிற்கு பின் பேசிய திரு. ராஜு, தியானத்தைப்பற்றிய விழிப்புணர்வு, சுயகட்டுப்பாடு, இளைஞர்களிடையே நற்பண்புகளை வளர்ப்பது போன்றவற்றில் சகஜமார்க்கம் ஆற்றும் சிறப்பான பணியை மெச்சினார். எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் இம்மாதிரி நிகழ்ச்சிகளில் ஊக்கமுடன் பங்கேற்க மாணவர்களும் ஆசிரியர்களும் உறுதி பூண்டனர்.


முசபர்பூர்

## ரோடக்

பிப்ரவரி 8ம் தேதி, M.D.பல்கலைக்கழகத்தின் அம்பேத்கர் மண்டபத்தில் நடந்த விழாவில், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் R.P.ஹூடாவும், அவரின் மனைவி திருமதி. வேதவதி ஹூடாவும் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டனர். மாணவர், ஆசிரியர், பெற்றோர் மற்றும் சிறுவர்கள் அடங்கிய சுமார் 400 பேர் இதில் கலந்து கொண்டனர். கட்டுரைபோட்டி பற்றியும், சகஜமார்க்கத்தை பற்றியும் மற்றும் SRCM,UNIC, VBSE பற்றியும் உரையாற்றப்பட்டன.


சண்டிகர்

## சண்டிகர்

பிப்ரவரி 18 ம் தேதியன்று, பஞ்சாப் பல்கலைகழகத்தின் பொன்விழா மண்டபத்தில், நிகழ்ச்சிகள் நிறைவேறின. கலைத்துறைத்தலைவர் முக்கிய விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். "இளைய சமுதாயம் : விழிப்பு மற்றும் உழைப்பின் காலம் " என்ற தலைப்பு நிகழ்ச்சியின் மையக்கருத்தாக அமைந்தது. பரிசளிப்பிற்குப்பின், ஒரு சிறிய வீடியோ படம் திரையிடப்பட்டது.


சண்டிகர்

## பட்டாம்பி

பிப்ரவரி 27ம் தேதி நடந்த விழாவில், பரிசு பெற்ற 8 பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. மாணவர், பெற்றோர் மற்றும் பல கல்வி நிலையங்களின் முதல்வர்கள் பங்கேற்றனர். சகோ. ராமன் பட்டாத்ரிபட் மற்றும் சகோ. நாராயணன் சான்றிதழ் வழங்கினர். மாணவர்கள் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். தங்கள் குழந்தைகளின் மனிதப்பண்புகளை உருவாக்குவதில் மிஷனின் தொண்டு பற்றி பெற்றோர்கள் மிகவும் பாராட்டினர்.

## மீரட்

மீரட்டில் 484 பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் பிற கல்வி நிலையங்களிலிருந்து மொத்தம் 16653 மாணவர் மூன்று பிரிவிலும் பங்கேற்றனர். மதிப்பீட்டிற்குப் பின்

647 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன. மாணவர்களின் பெற்றோர்களும், ஆசிரியர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். பிரசெப்டர்கள், விருந்தினர்க்கு சகஜ மார்க்கதைப் பற்றிய முன்னுரையும், ஆர்வம் காட்டியவர்களுக்கு மிஷனின் கையேடுகளும், சிற்றேடுகளும் அளித்தனர்.


மீரட்

## சுல்தான்பூர்

பிப்ரவரி 20ம் தேதியன்று, 600க்கும் மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சுல்தான்பூர் மாவட்டத்தின் 97 கல்லூரிகளின் முதல்வர்கள் விழாவில் கலந்து கொண்டனர். ஆசிரமத்தின் சூழல் மாணவர்களை பெரிதும் ஈர்த்தது. அவர்கள் மிஷனைப்பற்றி அறிய மிகவும் ஆர்வமுற்றனர். அலஹாபாத், ஜௌன்பூர் மற்றும் வாரணாசி போன்ற மையங்களிலிருந்தும் அப்யாசிகள் விழாவில் கலந்து கொண்டனர். Dr.ஷிவ்மோகன் பாண்டே "ஆன்மீகத்தில் இளைஞர்களின் பங்கு" என்ற பொருளில் பேசினார்.


சுல்தான்பூர்

## மொராதாபாத்

பிப்ரவரி 27ம் தேதியன்று, ஆசிரமத்தில் நடந்த விழாவில், 95 பள்ளிகளிலிருந்து 180 மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். சகோதரி நீலம், கட்டுரைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று தலைப்புக்களை பற்றி விவரித்துக்கூறினார். சகோ. ஷ்ரவன் குமார் சான்றிதழ் வழங்கினார். இந்த இனிமையான சூழலை அனுபவித்தது மட்டுமின்றி, பல விருந்தினர் மிஷனை பற்றி அறியவும் அதில் சேரவும் ஆர்வம் காட்டினர்.

## ஷாஜஹான்பூர்

ஷாஜஹன்பூர் மையம் பிப்ரவரி 27ம் தேதி விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தது. மையத்தின் 45 கல்வி நிலையங்களில் போட்டி நடந்தது. Dr. ரமாஷங்கர் மௌர்யா, (A.D.M) முக்கிய விருந்தினராக பங்கேற்று, வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். மையப்பொறுப்பாளர் சகோ. பகவான் தாஸ், இந்நிகழ்ச்சி நடத்தப்படுவதின் நோக்கத்தை எடுத்துரைத்தார்.

## குல்பர்கா

பிப்ரவரி 2ம் தேதி நடந்த நிகழ்ச்சியில், 50 மாணவர்களும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர். சகோ.பிரஹலாத் பக்னிகர், சகோ.ஸ்ரீகாந்த்ஜோஷி மற்றும் சகோ. ராஜு, சகஜ மார்க்கத்தின் முக்கிய நெறிமுறைகளைப்பற்றி விவரித்துக்கூறினார்.

## ஹுப்ளி

பிப்ரவரி 13ம் தேதியன்று, தார்வார் மாவட்டம் கல்வித்துறையின், கூடுதல் கண்காணிப்பாளர் திரு. V.A.மச்சக்னுர் KAS, முக்கிய விருந்தினராக பங்கேற்றுப் பேசிய பொழுது, மிஷன், கல்வித்துறையில் ஆற்றும் பணியினை குறித்து மிகவும் மகிழ்ந்தார். கல்வித்துறையில் நற்பண்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். சகோ. ((Dr.))பர்கோல், இக்கட்டுரைப்போட்டி நடத்துவதின் நோக்கத்தைப்பற்றியும், இளைய மனங்களின் உருவாக்க தருணங்களில் அதனால் ஏற்படும் தாக்கத்தைப் பற்றியும் விவரித்தார். சகோ. ராஜு சகஜ மார்க்க நெறிமுறைகளைப்பற்றி விளக்கமளித்தார்.

## பீதர்

பிப்ரவரி27ம் தேதி நடந்த விழாவில், சுமார் 50 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்றனர். மையப்பொறுப்பாளர் சகோ. ஹர்லால் சவான் இக்கட்டுரைப்போட்டியின் நோக்கத்தைப்பற்றியும் அது எவ்விதம் 2010ம் வருடம், மிகுந்த வரவேற்புடன் எதிர்கொள்ளப்பட்டது என்பதையும் நினைவு கூர்ந்தார். சகோ.ராஜு ஆன்மீகத்தின் அவசியத்தைப்பற்றியும், சகஜமார்க்க முறையைப்பற்றியும் எடுத்துரைத்தார்.

மாணவர்களுக்கும், கல்விநிலையங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 18 வயதிற்குமேற்பட்ட மாணவர்களுக்கு, சகஜமார்க்க பயிற்சி முறை பற்றிய அடிப்படை நூல் வழங்கப்பட்டது.

பல மாணவர்கள், இப்போட்டிக்கு எவ்விதம் தயார் செய்தனர் என்பது பற்றிய அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர். நற்பண்பு, உண்மையான சுதந்திரம், பொதுவான குறிக்கோள், மற்றும் நெறிசார்ந்த குறிக்கோள் போன்றவற்றை இதற்கு முன் சிந்தித்ததேயில்லை எனக்கூறினர். இப்போட்டியில் பங்கேற்ற பொழுது, மேற்கூறியவை எவ்விதம் உண்மையான பொருளில் மலர்ந்தன என்பதைக்கண்டு ஆச்சரியமுற்றனர். பெற்றோர்களும் தேர்ந்தெடுக்குப்பட்ட தலைப்புகளை குறித்தும், மிஷனின் பணிகளை குறித்தும் உவகை அடைந்தனர். சகஜமார்க்கத்தில் சேரவும் பலர் ஆர்வம் காட்டினர்.

## பெல்லாரி

பிப்ரவரி 2ம் தேதி நடந்த நிகழ்ச்சியில், 7 பள்ளிகளிலிருந்து 25 மாணவர்கள் பங்கேற்றனர். SRCM பற்றிய முகவுரைக்குப்பின், மாணவர்கள், இப்போட்டியை பற்றிய எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆன்மீகத்தைபற்றியும், வாழ்க்கையில் நல்லொழுக்கத்தைக் கைக்கொள்வதின் அவசியத்தைப்பற்றியும் அவர்கள் மனதில் ஆழமாக பதிந்திருப்பதை அவர்கள் பேச்சு வெளிக்கொணர்ந்தது.

## ஹும்னாபாத்

மார்ச் 6ம் தேதி, சகோ. பக்காரெட்டியின் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியில், 15 பேர் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சகோ. ஸ்ரீகாந்த் ஜோஷி, 'ஆன்மீகம் - ஒரு அத்தியாவசியம்' என்ற தலைப்பில் ஒரு உரையாற்றினார்.

## லக்னோ

லக்னோ நகரத்திலுள்ள 95 கல்வி நிலையங்களில், கட்டுரைப்போட்டி நடத்தப்பட்டது. பிப்ரவரி 27ம் தேதி நடந்த விழாவில், 400க்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். லக்னோ பல்கலைகழகத்தின் சமூகவியல் துறைத்தலைவரான பேராசிரியர் A.K. ஸ்ரீவாஸ்தவா, முக்கிய விருந்தினராக பங்கேற்று பரிசுகள் வழங்கினார்.


ஷாஜஹான்பூர்


குல்பர்கா


ஹுப்ளி


பீதர்


பெல்லாரி


ஹும்னாபாத்



## சகோ. A.P.துரையின் மங்களூர் வருகை - கர்நாடகா

துணைச் செயலாளர் சகோ.A.P.துரை, பிப்ரவரி 24 அன்று மங்களூருக்கு வருகைபுரிந்தார். அவரைச் சந்திக்க, சுமார் 50 அப்யாசிகள் குழுமியிருந்தனர். சகோ.நளினி, புதிய அப்யாசிகளின் நலன்கருதி, பிரார்த்தனையின் பொருளை விளக்கினார்.

ஆசிரமத்திற்கான நிலம்தேடுவதற்காக, சகோ. சுப்ராய பாய், பிரசாத் கிருஷ்ணா, சகோதரி லதா ஹோலா, சகோ. கணேஷ் மற்றும் சகோ. ராதாகிருஷ்ணா ஆகியோர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. மாஸ்டர் மீது நம்பிக்கை வைத்து பணியைத் துவக்கினால், வழிவகைகள் தானாக வரும் என்று அவர் கூறினார்.

அப்யாசிகளுடன் கலந்துரையாடியபோது, சகோ. துரை கூறிய சில எண்ணங்கள் கீழ் வருமாறு:

" எங்களை அந்நிலைக்கு அழைத்துச் செல்லும் ஒரே தெய்வமும் சக்தியும் நீரே" என்பதன் அர்த்தம் என்ன?

மாஸ்டரை கடவுளாகவும், சக்தியாகவும் ஏற்றுக் கொண்டு, அவர் மீது நம்பிக்கை வைப்பதன் மூலம், ஒருவர் துணிவு, தைரியம் உள்ளவராக ஆவதுடன், சக்தி வாய்ந்த மக்களிடம் இருந்து வரும் எந்தவித நிர்ப்பந்தத்திற்கும், தவறான கட்டளைகளுக்கும் கூட அடிப்பணிய மாட்டார்கள்.

நம்தவறுகளையும், குறைகளையும் சரிசெய்வதற்காக நம்மை நோக்கி திசை திருப்பப்படும் கோபமானது, நல்லதே ஆகும்.

பிச்சையெடுத்தல் என்று எதுவும் இல்லை. பிரார்த்தனையானது, ஒரு பிச்சைக்காரன் தன் கையில் ஒருபிச்சை எடுக்கும் பாத்திரத்தை வைத்துக் கொண்டு, என்ன கேட்பது என்று அறியாமல், ஆனால் மாஸ்டர் கொடுப்பதைப் பெற்றுக் கொள்ள, மாஸ்டர் முன்பு தாழ்மையுடன் நின்று கொண்டிருப்பதைப் போல் இருக்க வேண்டும். எவ்விதமான எதிர்பார்ப்பும் இல்லை. இவ்வாறு நாம் பிரார்த்தனை செய்யும் போது, நம்மிடையே வாழும் மாஸ்டர், கடவுளிடமிருந்து தெய்வீக சக்திகளை கிரகித்துக் கொள்கிறார்.

"நீங்களே அனைத்தையும் கையாளுகிறீர்கள், நான் உங்கள் கைகளில் உள்ள ஒரு கருவிமட்டுமே" என்ற மனப்பாங்குடன் மாஸ்டர் மீது முழுமையான நம்பிக்கை வைத்தல். அம்மாதிரியான நம்பிக்கையானது, தெய்வீகசக்தியைப் பெற்று, நிகழ்ச்சியை நடத்திச் செல்லும்.

மாஸ்டரின் புத்தகங்களை மீண்டும் மீண்டும் படிப்பது, சத்சங்கங்களுக்குப் பிறகு புத்தகம் வாசித்தலை ஏற்பாடு செய்வது, அப்யாசிகளின் வீடுகளில் இல்லக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது ஆகியவற்றின் அவசியத்தை சகோ. துரை வலியுறுத்தினார். அவரது பணிகளைச் செய்வதே, மாஸ்டரின் கவனத்தை நம்மீது திருப்புவதற்கான ரகசியம் என்று அவர் கூறினார்.

## திருப்பூரில் பல்வேறு நிகழ்வுகள் - மார்ச் 2011

மார்ச் 4 மற்றும் 5 தேதி, செட்டிப்பாளையம், யோகாசிரமத்தில் துணைச்செயலாளர் சகோ. A.P.துரை தலைமையில், தமிழ்நாடு பிரிபெக்ட்களின் கூட்டம் நடைபெற்றது.

மார்ச் 6ம் தேதி, சகோ. துரை நடத்திய ஞாயிறு சத்சங்கத்தைத் தொடர்ந்து, முழுநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்யாசிகளிடையே குழுக் கலந்துரையாடல், வினா - விடைப்பகுதி மற்றும் பிரிபெக்ட்களின் உரைகள் ஆசியவை இருந்தன.

மாஸ்டர், தனது பிறந்த நாள் விழாவை திருப்பூரில் கொண்டாட அனுமதி அளித்திருப்பதால், அந்நிகழ்ச்சிக்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அங்கத்தினர்கள், மார்ச் 9ம் தேதி கூடி, கலந்துரையாடினர். செயலாளர் சகோ. உமாசங்கர் பாஜ்பாய், சத்சங்கம் நடத்தியதைத் தொடர்ந்து, ஒரு அறிமுக அமர்வு இருந்தது. அங்கத்தினர்கள், வைரவிழாப்பூங்காவிற்குச் சென்று, அனைத்து ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் ஆகியவை பற்றி, பல்வேறு துறைகளைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டர்களுடன் கலந்தாலோசித்தனர்.

அதே நாளில், புதிதாகச் சேர்ந்துள்ள அப்யாசிகளுக்கு, ஒரு ATP (Abhyasi Training program) நிகழ்ச்சி நடைபெற்றது. பழைய அப்யாசிகள் பலரும் கூட இந்நிகழ்ச்சியில் பங்கேற்று, புதிய அப்யாசிகளுடன் சேர்ந்து பலனடைந்தனர்.

## சயசோதனைக்கான ஒரு நேரம் - நாட்றாம்பள்ளியில் இளைஞர்கள் - தமிழ்நாடு

மார்ச் 12 மற்றும் 13ம் தேதிகளில், 85 அப்யாசிகளுக்கான இளைஞர் நிகழ்ச்சி ஒன்று, நாட்றாம்பள்ளி ஆசிரமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆசிரம மானேஜர், சகோ. பரதராஜன் பேசியதைத் தொடர்ந்து, 'சகஜ மார்க்கத்தில் இளைஞர்பங்கு" என்பது பற்றி சகோ. லட்சுமிநாராயணன் உரையாற்றினார். நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக, "சுய ஆய்வு" என்ற பகுதியில், அப்யாசிகள் பல்வேறு சூழ்நிலைகளில் தங்களைசுயசோதனை செய்து கொள்ளும்படியான வாய்ப்புகிட்டியது. ஒரு அப்யாசியாக சோதிடத்தில் உள்ள நம்பிக்கை, ஆன்மீகத் திருமணங்களின் முக்கியத்துவம், பாரம்பரியத்தின் முக்கியத்துவம் போன்ற தலைப்புகளில் நடைபெற்ற குழுக் கலந்துரையாடல்கள், அவர்களை ஆழ்ந்து சிந்திக்கவைத்து, தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளச்செய்தன. இரவில், உத்வேகம் ஊட்டக்கூடிய அனிமேஷன் திரைப்படமான 'Spirit' காட்டப்பட்டதுடன், அந்நாள் முடிவடைந்தது.

இரண்டாம்நாள், சகோ. ரகுபதியின், "இளைஞர்கள்: சகஜமார்க்கத்தின் எதிர்காலம்" என்ற உரையுடன் தொடங்கியது. அதையடுத்து, ஆன்மீக நிலையினைப் பராமரித்தல்' என்பது பற்றி சகோ. ஸ்ரீராம் ஒரு கருத்துரை வழங்கினார். சகஜமார்க்கப் பயிற்சி மற்றும் மிஷனின் பல்வேறு செயல்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவானது, வினாவிடை மூலம் பிரதிபலிக்கப்பட்டது. பிற்பகல் காட்டப்பட்ட வீடியோக்காட்சி மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்ததுடன், நம் வாழ்க்கையில் நேர்மறையாகச் சிந்தித்தல் மற்றும் மனோசக்தி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர்களுக்குப் புரியவைத்தது. அப்யாசிகள், நிகழ்ச்சியைப் பற்றிய தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு, வருடத்திற்கு இருமுறையாவது இம்மாதிரியான நிகழ்ச்சிகளை திரும்பவும் நடத்துமாறு நிர்வாகிகளைக் கேட்டுக்கொண்டனர்.





## இணைப்பும் கலந்துரையாடல்களும்
## நெய்வேலி மையம், தமிழ்நாடு



நெய்வேலி மையம் மார்ச் 20ம் தேதி அன்று, புதுச்சேரியில், ஒன்றுகூடும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் மற்றும் நெய்வேலியிலிருந்து சுமார் 100 அப்யாசிகள் பங்கேற்றனர்.

'தியானத்தின் முக்கியத்துவம்' மற்றும் 'உங்களை மாற்றிக் கொள்ளுங்கள்' என்பது பற்றி புதுச்சேரி மையமும், 'உங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளுங்கள்' என்பது பற்றி கடலூர் மையமும், 'நற்பண்பை உருவாக்குதல்' என்பது பற்றி விழுப்புரம் மையமும், மற்றும் 'நெறிமுறைகளும் நன்னடத்தையும்' என்பது பற்றி நெய்வேலிமையமும் அளித்த கருத்துரைகள் அனைத்தும், தகவல் செறிந்ததாக இருந்ததுடன் பங்கேற்றவர்களுக்கு சிந்திக்கத் தேவையான கருத்துக்களையும் வழங்கின. நிகழ்ச்சியானது, பெரும்பாலும் அனைவரும் ஆர்வத்துடன் பங்குபெறும் விதத்தில், கலந்துரையாடலாக அமைந்தது.

இந்த ஒன்றுகூடும் நிகழ்ச்சியானது, பல்வேறு மையங்களின் அப்யாசிகள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும், சகோதரத்துவத்தை மேம்படுத்தவும் உதவியது.

## தியானகூடம் திறப்புவிழா
## திருத்துறைப்பூண்டி, தமிழ்நாடு



கடந்த வருடம், அக்டோபர் மாதம், ஆர்வமுள்ள 25பேர் மிஷனில் சேர்ந்தபோது, சகஜமார்க்கத்தின் திருத்துறைப்பூண்டி மையம் உருவானது. அன்று முதல் அம்மையத்தில், ஞாயிறுதோறும் சத்சங்கம் முறையாக நடைபெற்றுவருகிறது.

மார்ச் 7ம் தேதி, மண்டலப்பொறுப்பாளர் சகோ. S. பிரகாஷ், புதிய தியானக்கூடத்தைத் துவக்கி வைத்தபோது, சுமார் 40 அப்யாசிகள் கூடியிருந்தனர். ஒரு அப்யாசியின் இல்லத்தின் முதல் தளத்தில் இந்தக்கூடம் உள்ளது. மார்ச் 13ம் தேதி, ஒரு வரவேற்புக் கூட்டமும் நடத்தப்பட்டது. அருகில் உள்ள மையங்களின் பிரிசெப்டர்களின் ஆதரவுடன் இந்தமையம் வளர்ச்சியடைவதைக்காண நிறைவாக உள்ளது.



## கலந்துரையாடல் நிகழ்ச்சி - தென்காசி, தமிழ்நாடு.

தென்காசி மையம், பிப்ரவரி 27ம் தேதி அன்று, இளைஞர்களுக்கான ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியை, ஏற்பாடு செய்தது. 8 சகோதரர்களும், 3 சகோதரிகளுமாக மொத்தம் 11 அப்யாசிகள் இதில் பங்கேற்றனர். "நம் மிஷன் மையத்தை சிறப்பாக பயன்படுத்தி, நம்மை எவ்வாறு மேம்படுத்திக் கொள்வது?" என்பதே உரையாடலின் பொருள் ஆகும். முறையான பயிற்சி தான் சமநிலை வாழ்க்கைக்கு ஒரேவழி என்பதால், அதைச் செய்வது மிக அவசியம் என்று பங்கேற்றவர்கள் மீண்டும் மீண்டும் கூறினர். அப்யாசிகள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்றதன் மூலம் உரையாடல் நல்ல முறையில் அமைந்தது.

## நிர்வாக அங்கத்தினர் கூட்டம், குஜராத்

வடக்கு குஜராத்தின் மண்டலம் 6A, சுமார் 50 ஒருங்கிணைப்பாளர்கள், நிர்வாக அங்கத்தினர்களுக்கான வருடாந்திர கூட்டம், அகமதாபாத் மண்டல ஆசிரமத்தில் ஏப்ரல் 9,10 தேதிகளில் நடைபெற்றது. கடந்த ஆண்டின் செயல்பாடுகளைப் பற்றிய மறுபரிசீலனை, நிதி ஆண்டு 2011-2012 க்கான, பல்வேறு செயல்பாடுகள் தொடர்பான வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் மற்றும் தனிப்பட்டமைய வளர்ச்சி ஆகியவை, இக்கூட்டத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும்.



நம்பணிகளில், நேர்மறை மனப்பாங்கு மற்றும் தன்னம்பிக்கை ஆசியவறைப் பிரதிபலிக்க வைக்கும் விதத்தில், நாம் நம் மாஸ்டர் மீது நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்று, மண்டலப்பொறுப்பாளர் சகோ. ராஜேஷ் அகர்வால் வலியுறுத்தினார். முதல் பகுதியில், மையப் பொறுப்பாளர்கள், மைய மேலாளர்கள், துணை மண்டல ஒருங்கிணைப் பாளர்கள் ஆகியோர் கருத்துரை வழங்கினர். தரம் மற்றும் எண்ணிக்கை அடிப்படையிலான வளர்ச்சி பற்றிய சகோ. A.P துரையின் உரை மீது, ஒவ்வொரு குழுவினரும் கலந்துரையாடினர்.

இரண்டாவது நாளன்று, கட்டுரை நிகழ்வு, வெளியீடுகள், விபிஎஸ்இ, அடையாள அட்டைகள், கணக்கு வழக்குகள், இல்லக் கூட்டங்கள், வரவேற்புக்கூட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சி, இளைஞர் குழு, மற்றும் எக்கோஸ் செய்தி மடல் ஆகிய பல்வேறு செயல்பாடுகளைப் பற்றி, மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் கருத்துரை வழங்கினர். அவரவர்கள் செய்யும் தனிப்பட்ட பணி பற்றி, சிறப்பாக எடுத்துரைத்தனர். மேலும் மறுபரிசீலனை செய்வதற்காக பங்கேற்றவர்களுக்கு, ஒவ்வொரு செயல்பாட்டையும் பற்றிய வழிமுறைகள் வழங்கப்பட்டன.

சகோ. அங்கித் வியாஸ் மற்றும் சகோ. கேஜல் கன்சாரா ஆகியோர் இந்த அமர்வினை தொகுத்தளித்தனர். முடிவுரை வழங்கிய சகோ. ராஜேஷ், ஒவ்வொருவரும் வருடம் முழுவதும் இதே உற்சாகத்துடன் இருந்து, தன்னார்வத் தொண்டர்களிடையே இதைப் பரப்பவும் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

# ஒளி மையம்





கோயம்புத்தூர் மையம், 1974ஆம் ஆண்டு, R.Sபுரத்திலுள்ள, ஓர் அப்யாசியின் வீட்டில் செயல்படத்துவங்கியது. இதற்கான விதை, வெகு நாள் முன்பாகவே,1968ஆம் ஆண்டில், பாபூஜி மகராஜ் அவர்களின் வருகையால் விதைக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக் கிழமை சத்சங்கம், 200மக்கள் ஒன்றுகூடும் அளவிற்கு, R.Sபுரத்தில், 'கோல்ட் மிஸ்ட்' குடியிருப்பிலுள்ள, பெரிய தரைத்தள கூடத்திற்கு மாற்றப்பட்டது. இந்த கூடத்தை, மாஸ்டர், 1991,மே21ஆம் நாள், துவக்கி வைத்தார். அவரது துவக்க உரையில், கோயம்புத்தூர் மையம், மெதுவாகவே அடிவைத்து வளர்கிறது என்று கூறி வருத்தமுற்றார்.

மிக வேகமான முன்னேற்றமாக, 31ஏக்கர் நிலம் (16ஏக்கர் ஆசிரமத்திற்கு) நாச்சிப்பாளையம் கிராமத்தில் வாங்கப்பட்டது. இது கேரளாவில், மேற்கு தொடர்ச்சி மலைக் குறுக்கிலுள்ள, பாலக்காடிலிருந்து, ஒரு மணி நேர பயணத்தில் அமைந்துள்ளது. இந்த நிலம், நவம்பர் 1, 2000 அன்று மாஸ்டரால் பதிவு செய்யப்பட்டது.



குறிப்பிடத்தக்க அளவில் பெரியதாகக்கட்டப்பட்ட தியானக்கூடத்தை, ஜனவரி 5,2007 அன்று மாஸ்டர் துவக்கி வைத்தார். இந்த கூடத்தில்,1000மக்கள் தாராளமாகவும், மேலும் 500 மக்கள் நடைக்கூடங்களிலும் அமரலாம். மாஸ்டர், மலம்புழா சென்று வரும் ஒவ்வொரு முறையும், இந்த ஆசிரமத்தில் ஓய்வெடுக்க விரும்புவார். நிறைய மரங்கள் நடப்பட்டு நன்கு வளர்கின்றன. இவை ஆசிரமத்தை சுற்றிலுமுள்ள அப்யாசிகள் குடியிருப்பு பகுதியை, பசுமையான தீவாக ஆக்குகின்றன.




இங்கு அவர் ஆற்றிய ஓர் உரையில், "முதலில் மாஸ்டரை நேசியுங்கள். பிறகு, அவர் செய்யுங்கள் என்று கூறினார் என்பதற்காக, தியானத்தையும், சுத்திகரிப்பையும் செய்யுங்கள் என்றார். தியானம், நம்மை இலட்சியத்திற்கு இட்டுச் செல்லாது, என்பது என் தனிப்பட்ட நம்பிக்கையாகும். ஏனெனில், இந்திய ஆன்மீக வரலாற்றில், மக்கள் ஆயிரக்கணக்கான வருடம் தியானம் செய்திருந்தும், இலட்சியத்தை அடையவில்லை. இதைப் பற்றி, பாபூஜியிடம் நான் கேட்டபொழுது, 'ஆம், நீ சரியாக கூறினாய்' என்றார். 'பிறகு ஏன் தியானம், சுத்திகரிப்பு போன்றவைகளை பரிந்துரைக்கின்றீர்கள்?' என்று கூறினேன். 'கீழ்ப்படிதல், மக்களிடம் கீழ்ப்படிதலை உருவாக்கவே' என்று அவர் பதிலளித்தார்."



25அப்யாசிகளுடன் தொடங்கிய இந்த மையம், தற்பொழுது 450அப்யாசிகளைக்கொண்டதாக வளர்ந்துள்ளது. மேலும், புதன் கிழமை சத்சங்கமும் ஒன்பது இடங்களில் நடைபெறுகிறது. அப்யாசிகளுக்கு கூடுதல் படுக்கை அறையும், தங்கும் விடுதிகளும், மாஸ்டருக்கான அலுவலகமும், கட்டுமான பணியில் உள்ளன. குறைந்தது 2000அப்யாசிகள், தற்பொழுது இங்கு இருக்க வேண்டும் என்று மாஸ்டர் ஒரு முறை கூறினார். இந்த நோக்கம், இம்மையத்தின் அப்யாசிகள் மற்றும் பிரிபெக்ட்களின் உள்ளார்ந்த முயற்சியால், விரைவில் கைகூடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.